## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## சி.சி. 117/2022

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | வயது | 46 |
| த.பெ.(அ)க.பெ. | ராஜா | தொழில் | இல்லத்தரசி |
| ஊர் | மேற்கத்தியானூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் மேற்கத்தியானூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 எனது மாமா. அ.சா.2 எனது அக்கா. வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது உறவினர்கள்.வழக்கின் எதிரிகளும் அ.சா.1 குடும்பத்தாரும் பங்காளிகள். அவர்களுக்கிடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. 29.11.2020 ந் தேதி மாலை சுமார் 7.30 மணிக்கு அ.சா.1 எனது மாமா வீட்டின் அருகே உள்ள எனது அம்மா வீட்டிற்கு நான் வந்த போது 2 ம் எதிரி ஆனந்தன் அ.சா.1 எனது மாமாவை அடித்து விட்டார். நான் அதற்கு 2 ம் எதிரியிடம் ஏன் எனது மாமாவை அடித்தாய் என்று கேட்டேன். அதற்கு என்னை பார்த்து 2 ம் எதிரி நீ எதற்கு என்னை கேட்கிறாய் உனக்கு என்ன உரிமை இருக்கிறது என்றும் தேவிடியா, தொம்பச்சி என்று ஆபசாமாக திட்டினார்கள். நான் அதன் பிறகு வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

2 ம் எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

## <u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>
## <u>சி.சி. 117/2022</u>

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கீதா | வயது | 35 |
| த.பெ.(அ)க.பெ. | திருப்பதி | தொழில் | இல்லத்தரசி |
| ஊர் | மேற்கத்தியானுார் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்துார் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்துார் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் மேற்கத்தியானுார் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 எனது மாமானார் அ.சா.2 எனது மாமியார். வழக்கின் எதிரிகள் எனது கணவர் குடும்பத்தாரின் பங்காளிகள். வழக்கின் எதிரிகளுக்கும் எங்களுக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. அவர்கள் எங்களுடைய நிலத்தை போலி ஆவணம் தயாரித்து எழுதிக்கொண்டுள்ளார்கள். எங்களுடைய வீட்டை அவர்கள் பெயரில் எழுதிக்கொண்டதோடு எங்கள் வீட்டிற்கு செல்லும் வழியையும் காம்பவுண்டு போட்டு தடுப்போம் என்றார்கள். நாங்கள் ஆவணங்களை பரிசோதித்து பார்த்ததில் அந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பது உறுதியானது. இந்நிலையில் 29.11.2020 அன்று காலை ஊரில் இதுசம்மந்தமாக பஞ்சாயத்து நடந்தது. அந்த பஞ்சாயத்தை நடக்க விடாமல் எதிரிகள் தடுத்ததோடு பஞ்சாயத்து எடுத்த முடிவிற்கும் கட்டுபட மறுத்துவிட்டார்கள். தகாத வார்த்தைகளை பேசி பஞ்சாயத்தை கலைத்து விட்டார்கள்.

(2) அன்றைய தினம் மாலை சுமார் 7.30 மணிக்கு 1 மற்றும் 2 எதிரிகள் மது அருந்திவிட்டுவந்து எங்கள்வீட்டின் அருகே தகராறு செய்தார்கள். தேவிடியா பசங்களா, உங்கம்மால வோக்க என்று அசிங்கமாக திட்டி எனது மாமியார் மாமானார் எனது கணவரை வெளியே வரும்படி அழைத்தார்கள். எங்களுக்கும் துளசி வீட்டாருக்கும் தான் பிரச்சனை நீங்கள் எதற்காக வருகிறீர்கள் என்று எனது மாமியார் வழக்கின் எதிரிகளை பார்த்து கேட்டார். நானும் அவர்களை பார்த்து துளசி வீட்டாரிடம் நாங்களே பேசி தீர்த்துக்கொள்கிறோம். நீங்கள் சண்டை போடாதீர்கள் என்று சொன்னோம். நான் சொல்லிக் கொண்டிருக்கும்

போதே 1 மற்றும் 2 எதிரிகள் சேர்ந்து அ.சா.1 எனது மாமானாரை கையால் அடித்து விட்டார்கள். நான் எவ்வளவு தடுத்தும் கேட்காமல் திரும்ப திரும்ப என் மாமானாரை அடித்தார்கள்.

(3) எனது மாமியார் அ.சா.2 ஐ 2ம் எதிரி வயிற்றின் மீது எட்டி எட்டி உதைத்தார். எனது கணவர் அப்போது வீட்டில் தான் இருந்தார். நான் அவரை வெளியே வரவிடவில்லை. அவர் வெளியே வந்தால் அவரை தீர்த்து கட்ட வேண்டும் என்று முடிவோடு இருந்தார்கள். எதிரிகள் எனது மாமனாரை அடித்து உதைத்து நாங்கள் கீழே போட்டு வைத்திருந்த ஒரு மரத்தின்மீது அவரை தள்ளி அவரது கழுத்தின் மீது காலை வைத்து 2ம் எதிரி மிதித்தார். அதை பார்த்துதான் அ,சா,3 சாட்சி ராணி வந்து எதிரிகளை தடுத்து என்மாமானாரை காப்பாற்றினார். அதன்பிறகு திருப்பத்துர் அரசு மருததுவமனைக்கு அ.சா 1 மற்றும 2 ஐ சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். போலீஸார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

2ம் எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.